மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.

முன்னிலை:- திருமதி **R.D.** குருலட்சுமி, M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் ஆவணித் திங்கள் 7-ம் நாள்
2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23 ஆம் நாள் வெள்ளிக் கிழமை

இடைநிலை மனு எண்.2/2023
இன்
அசல் வழக்கு எண்.54/2023
(CNR.No.TNTR21-000058-2023)

...

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பொன்பாடி கிராமம் மற்றும் அஞ்சல், மேட்டுத் தெரு, கதவு எண்.1/15 என்ற முகவரியில் வசிக்கும் K. சுப்பிரமணி மனைவி சுமார் 58 வயதுள்ள S. தனம்மாள்

... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம் & வட்டம், J.J.ரவி நகர், துர்கையம்மன் கோயில் தெருவில் வசிக்கும் C. நரசிம்மன் மகன் சுமார் 50 வயதுள்ள C.N. ஆறுமுகம்
2. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம் & வட்டம், J.J.ரவி நகர், துர்கையம்மன் கோயில் தெருவில் வசிக்கும் C.N. ஆறுமுகம் மனைவி சுமார் 47 வயதுள்ள A. அன்னபூரணி
3. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம் & வட்டம், J.J.ரவி நகர், துர்கையம்மன் கோயில் தெருவில் வசிக்கும் A. ஆறுமுகம் மகன் சுமார் 24 வயதுள்ள மகன் சுமார் 63 வயதுள்ள A. லோகேஷ்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இவ்வழக்கு முடியும்வரை மனுச் சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தினை, எதிர்மனுதாரர்களோ/ பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நாள்: 24.11.2023

இம்மனுவிற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.20/-செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கடந்த 07.08.2024 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் C.N. நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. வெங்கடேசன், N. பாலாஜி, P. பிச்சைமணி, ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவாணை

1. மனு சொத்தை அசல் வழக்கு முடியும்வரை தற்போதுள்ள அதே நிலையில் அப்படியே (Status-quo) வைத்திருக்க உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

2. அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

## Schedule of property

Tiruvallur District, Tiruttani Taluk, Tiruttani Firka, Tiruttani Sub-Reg.Dt., in Tiruttani village accounts:- Under Patta No.6967

Dry S.No.273/10A, New Dry S.No.273/26, House site measuring East to West 56 feet, North to South 22 feet, Total 1232 Sq.feet.

Bounded to the North by Plot No.15, to the South by Plot No.17, to the East by 20 feet vide road and to the West by Kollapuriamman Nagar lay-out within these boundaries, Plot No.16.

### செலவுத் தொகைப் பட்டியல்

இருதரப்பிலும் செலவுத் தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23 ஆம் நாள் என் கையழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற இலட்சினைப் பதிப்பிக்கப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.02 11:14:24 -0600

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.